எடுத்திருக்கிறார்கள். அத்தனை தொழிற்சாலைகளும் பல்வேறு நடவடிக்கைகள் மூலமாகக் கட்டுப்பட்டிருந்தாலும் அந்தப் பகுதியிலே உப்புத் தண்ணீர் மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தால் சவ்வூடு பரவல் முறையை நடைமுறைப்படுத்துவதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அது அரசினுடைய நல் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மேலும், அதை அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அவருடைய ஒத்துழைப்போடு அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அவைக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 211, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

211—

மாணவர் விடுதி

***11342—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், கெஜல்நாயக்கன்பட்டியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ/ மாணவியர் விடுதி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கழகத் தொண்டர்களை அரியாசனத்தில் அமர்த்திய எங்கள் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

விடை—

(அ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், கெஜல்நாயக்கன்பட்டியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ/ மாணவியர் விடுதி கட்டும் பணி அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். நடராஜன்.

2002 ஏப்ரல் 23]

திரு. எஸ். நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாட்ராம்பள்ளி தொகுதி பகுதியிலுள்ள கந்திலி ஒன்றியம், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் வாழ்ந்து வரும் பகுதியாகும். கெஜல்நாயக்கன்பட்டியிலுள்ள ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1250 மாணவர்களும், பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 980 மாணவியர்களும் படித்து வருகிறார்கள். அதுமட்டுமல்ல, அருகிலுள்ள தோக்கியம் உயர்நிலைப் பள்ளியில் 480 மாணவர்களும், கசிநாயக்கன்பட்டி உயர்நிலைப் பள்ளியில் 430 மாணவர்களும் படித்து வருகின்றார்கள். இவர்களின் நலன் காக்க இந்த நிதியாண்டில், மாணவர்களுக்கு இல்லாவிட்டாலும், மாணவியர்கள் தங்கிப் படிப்பதற்காவது ஒரு விடுதியைக் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இசைவளிப்பார்களா? மேலும், என்னுடைய தொகுதியில், ஏற்கெனவே தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட திட்டத்தில், புதுப்பேட்டை பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட அந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டு விட்டதா, இல்லையா என்பதையும் தங்களின் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகளுடன் அரசின் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கும், அரசின் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பதில், அரசின் தற்போதைய நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு, நாட்ராம்பள்ளி தொகுதியில், கெஜல்நாயக்கன்பட்டியில் புதிய மாணவர் விடுதி தொடங்கப்படுவது சாத்தியம் இல்லை என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிதியிலிருந்து அளிக்கப்பட்ட நிதியைக் கொண்டு அரசாணை எண் 5-ன்படி, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினருக்காக 2001-2002 ஆம் நிதியாண்டில் வேலூர் மாவட்டத்தில் மூன்று அரசுக் கட்டடங்கள் கட்ட ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.